அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் : 157 /2017
தேதி : 14.12.2017

**இறந்து கரை ஒதுங்கியிருக்கும் மீனவர் சடலங்களை DNA பரிசோதனை செய்து, உரிய குடும்பங்களிடம் ஒப்படைக்கவேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் கோரிக்கை.**

சமீபத்தில் தாக்கிய ஒக்கி புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட குமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் பலர் காணாமல் போனதை அடுத்து அவர்களைத் தேடி மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. தமிழக அரசின் சார்பில் உயிரிழந்த மீனவர்களுக்கு இழப்பீடு உள்ளிட்ட பல்வேறு நிவாரண உதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், காணாமல் போன மீனவர்களில் சுமார் 30க்கும் மேற்பட்டோர் உயிரிழந்து, அதனால் அச்சடலங்களில் சில கேரள மாநிலம் வேப்பூர் கடற்கரை பகுதியில் அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீனவர்கள் உயிரிழந்த துயரச் சம்பவத்தால் மீனவ குடும்பத்தினர் சோகத்தில் மூழ்கி இருந்தாலும், அச்சடலங்களில் இருந்து தங்களது குடும்பத்தை சேர்ந்தவர்களை அடையாளம் கண்டு தத்தம் மத சம்பிரதாயங்களின்படி இறுதிச்சடங்குகள் செய்ய வேண்டிய பரிதாப நிலையில் இருக்கிறார்கள்.

கடலுக்குச் சென்ற தங்கள் குடும்பத்து மீனவர்கள் காணாமல் போயிருந்தாலும், என்றைக்காவது திரும்பி வந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையோடு இருந்த மீனவ குடும்பங்கள், இறந்து போன தங்கள் வீட்டுப் பிள்ளைகளை அடையாளம் காண்பது சிறிதளவாவது அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும். எனவே அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இறந்து போன மீனவர்கள் எந்தெந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் கண்டு அந்தந்த குடும்பங்களிடம் ஒப்படைக்க வேண்டிய தார்மீக பொறுப்பு அரசுக்கு உள்ளது.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அழுகிய நிலையில் அடையாளம் காண முடியாமல் இருப்பதால், அச்சடலங்களை DNA பரிசோதனை செய்து அப்பரிசோதனை முடிவின் படி அந்தந்த மீனவக் குடும்பங்களிடம், சடலங்களை ஒப்படைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். மேலும், இறந்தவர்கள் அடையாளம் காணப்பட்ட பிறகு உடனடியாக அவர்களது இறப்பு சான்றிதழ்களும் வழங்கப்படவேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களின் சார்பாக தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com